செய்தி குறிப்பு எண்–116 நாள்– 4.9.2006

# தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் ஆசிரியர் நாள் செய்தி

தமிழக அரசு சார்பில் ஆசிரியர்நாள் விழா செப்டம்பர் 5 ஆம் நாளன்று சிறப்பாகக் கொண்டாடப்படுவதும், கல்வி வளர்ச்சியில் அரும்பணிகளாற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கு “டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது” வழங்கிச் சிறப்பிப்பதும் நினைந்து மகிழத்தக்க இனிய நிகழ்வுகளாகும்.

ஏழை எளிய நலிந்த சமுதாயம் எழுந்து நடந்திட இன்றியமையாது தேவைப்படும் கருவி கல்வியே. ஆசிரியர் இன்றிக் கல்வி இல்லை. ஆசிரியர் சமுதாயத்தை நம்பித்தான் நாடு இருக்கின்றது; சமுதாயம் இருக்கின்றது; ஏன், ஒரு நாட்டினுடைய எதிர்காலமே இருக்கின்றது. இதனை உணர்ந்ததால்தான் இந்த அரசு ஆசிரியர்களின் தேவையறிந்து, அவர்கள் கேளாத சலுகைகளையும் தாராளமாக வழங்கி ஆசிரியப் பெருமக்களின் நலன்களில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. ஒப்பந்த முறை ஆசிரியர் நியமனம் அடியோடு ரத்து; 400 கோடி ரூபாய் செலவில் காலமுறை ஊதியம்; போராட்ட காலம் ஊதியத்துடன் கூடிய பணிக்காலமாக ஆணை; பணியிட மாறுதல் வழங்கலில் ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு முறை; ஆசிரியர் நியமனங்களுக்கு பதிவு முன்னுரிமை; இந்த ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 20,000 புதிய ஆசிரியர்கள் நியமனம் என்பன போல ஏராளமான சலுகைகளை வழங்கி ஆசிரியர் சமுதாயம் அரவணைக்கப்படுவதை அனைவரும் அறிவர். அரசின் இந்த அணுகுமுறையை உணர்ந்து, கல்லாதார் இல்லை எனும்நிலை நாட்டில் உருவாக்கப்பட, காலத்தின் தேவைக்கேற்ற தரமான கல்வி வழங்கப்பட, சாதி மத பேத உணர்வைக் குழந்தைகள் காணாவண்ணம் ஆசிரியர்கள் சமத்துவ மாமணிகளாய்த் திகழ்ந்திட, தாய்த்தமிழ்க் கல்வி எல்லாப் பள்ளிகளிலும் கற்பிக்கப்பட உறுதியேற்று உழைத்திட வேண்டும் என அருமை ஆசிரியப் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். விருது பெறும் ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன், அனைத்து ஆசிரிய உடன் பிறப்புகளுக்கும் என் உளமார்ந்த ஆசிரியர் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன். வாழ்க ஆசிரியர்கள்!

////

வெளியீடு–இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.